# புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம்!

கடந்த வருடங்களுக்கு மேலாக நிலைகொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மக்களின் உறுதியான போராட்டத்தின் விளைவாய் முற்றாக வாபஸ் பெற்றுள்ளது. இது இந்திய விரிவாதிக்கத்திற்கு கிடைத்த பலத்த அடியாகும். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறிய இன்றைய நிலையில் இலங்கை அரசு தனது பாசிச இனவெறி ஆட்சியை தொடர எல்லாவகையிலும் முயலுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக பெற்ற வெற்றியை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், இனவெறி அரசிடமிருந்து விடுதலை பெறவும் மக்களின் நல்வாழ்வை அமைக்கும் பொருட்டு போராட்டம் இனி எந்தத் திசையில் அமையவேண்டும் என்பதை விளக்குமுகமாக இப்பிரசுரத்தை வெளியிடுகின்றோம்.

## ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம்

ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும், இன-நிற ஒடுக்கு முறையாளர்களுக்கு எதிராகவும், சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராகவும் உலகெங்கும் மக்கள் போராடி வருகின்றனர். ஜனநாயகத்திற்கான மக்கள் போராட்டங்கள் என்றுமில்லாதவாறு அண்மைக் காலங்களில் தீவிரமடைந்தும், வெற்றிவாகை சூடியும் வருகின்றன. மக்களின் உறுதியான போராட்டங்களை அடக்கி ஒடுக்க முடியாமல் ஆக்கிரமிப்பாளர்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளும் நிகழ்வுகள், ஒடுக்குமுறையாளர்கள் தூக்கி எறியப்படும் நிகழ்வுகள், சர்வாதிகாரிகள் நாட்டைவிட்டு ஓடிய நிகழ்வுகள் பல நடைபெற்றுள்ளன. ஆணுஆயுத வலிமை கொண்ட அமெரிக்க, இரஷ்சிய வல்லரசுகள் கூட பல நாடுகளில் மக்களின் உறுதியான போராட்டங்களினால் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றன. இவை யாவும் 'மக்கள் சக்தியே மகத்தான சக்தி ' என்பதை நிரூபிப்பனவையாக இருப்பதை நாம் காணலாம்.

அண்மைக்கால ஜனநாயகப் போராட்டங்களில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான இலங்கை மக்களின் போராட்டம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். கடந்த 32 மாதங்களாக நிலை கொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் இலங்கை மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தினால் விரட்டியடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்கள் இவ்வெற்றியை ஈட்டுவதற்காக பாரிய விலையைச் செ மாதங்களாக நிலை கொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் இலங்கை மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தினால் விரட்டியடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்கள் இவ்வெற்றியை ஈட்டுவதற்காக பாரிய விலையைச் செலுத்தியுள்ளனர். தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பெற்ற இவ்வெற்றியானது ஒரு தேசிய இனத்தை அதன் சொந்த மண்ணில் எந்த ஒரு வல்லரசாலும் தோற்கடிக்க முடியாது என்பதை உலகிற்கு மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றது.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டமானது இலங்கைமக்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்தியது. சிங்கள தமிழ் மக்கள் அனைவரும் ஆக்கிரமிப்புக்கு எதிராக திரண்டு எழுந்தனர். இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு மக்கள் அனைவரும் ஒருமித்து ஆக்கிரமிப்புக்கு எதிராக குரல் கொடுத்தனர். ஊரடங்குச் சட்டங்களையும் மீறி சிங்கள மக்கள் ஆர்ப்பாட்ட ஊாவலங்களை மேற்கொண்டனர். ஆயிரக்கணக்கில் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போதும் மேலும் மேலும் மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்தன. தமிழ் மக்கள் பெருமைப்படக்கூடிய வகையில் ஆயதம் ஏந்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தனர். இதில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தின் மூலம் இலங்கை மக்கள் இந்திய விரிவாதிக்க நோக்கத்தையும், இந்திய ஆக்கிரமிப்புக்கு துணைபோன இலங்கை அரசின் துரோகத் தனத்தையும் தெளிவாக இனங்கண்டு கொண்டனர். குறிப்பாக தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா ஒருபோதும் உதவப்போவதில்லை என்பதையும் மாறாக தமது போராட்டத்தை அடக்கி ஒடுக்க முனைந்த ஒரு எதிரியே என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டனர். ஆத்துடன் போராளி வடிவில் இருந்துகொண்டு இந்திய எதிரிக்கு கைக்கூலிகளாக செயற்பட்டு வந்த போராளிக் குழக்களையும் தமிழ் மக்கள் தெரிந்து கொண்டனர்.

## இந்திய அரசும், தொடரும் விரிவாதிக்க நோக்கமும்

ஆரம்பம் முதல் தனது விஸ்தரிப்புவாத நோக்கத்திற்காகவே இனப்பிரச்சனையை இந்திய அரசு பயன்படுத்தி வந்தது. இதன் ஒரு அம்சமாகவே இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அமைதிப்படை என்னும் பெயரில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை ஆக்கிரமித்தது. தனது பதவி நலன்களை காக்கும் பொருட்டு இந்திய ஆக்கிரமிப்புக்கு இலங்கை அரசு துணை போயிருந்தும் கூட, பல தமிழ் போராளிக் குழக்களும் இவ் ஆக்கிரமிப்புக்கு ஆதரவு தெரிவித்திருந்தும் கூட இந்திய அரசினால் தனது ஆக்கிரமிப்பை தொடர்ந்து நீடிக்க முடியாமல் வாபஸ் பெறவேண்டிய அளவிற்கு மக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்தன.

எவ்வளவு தான் அரக்கத்தனமான அழித்தொழிப்பில் ஈடுபட்டபோதும் மக்கள் அடிபணிய மறுத்தமை, மாறாக மேலும் மேலும் மக்கள் தங்கள் போராட்ட பலத்தை வளர்த்துக் கொண்டமை, இதனால் போராட்டக் களத்தில் ஏற்பட்ட தோல்வி, ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்திய மக்கள் காட்டிய எதிர்ப்பு, சர்வதேச ரீதியில் தொடர்ந்தும் அம்பலமாகும் நிலைமை என்பனவற்றிலிருந்து தப்பிக்கொள்ள, தவிர்க்க முடியாமல் இந்திய அரசு தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தை வாபஸ் பெற்றுக் கொண்டது. இராணுவத்தை வாபஸ் பெற்றுக் கொண்டபோதும் அதன் ஆக்கிரமிப்பு நோக்கத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. இந்திய அரசைப் பொறுத்த வரையில் அதன் ஆட்சிக் கட்டிலில் ஏற்பட்ட மாற்றம் கூட அதன் விரிவாதிக்க நோக்கத்தில் எவ்வித மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. புதிய இந்திய அரசு இதுவரை ஒப்பந்தத்தையும், ஆக்கிரமிப்புப் போரையும் எதிர்க்கவில்லை. மாறாக மேலும் அவற்றை நியாயப்படுத்தவே முயலுகின்றது. அத்துடன் கடந்த (ராஜீவ்) ஆட்சிக் காலத்தில் இந்திய அரசின் பிராந்திய ஆதிக்க கொள்கையை வகுத்து அமுல்படுத்திய அதிகார வர்க்கத்தினரே இன்றும் இருக்கின்றனர். ஆக்கிரமிப்பு நோக்கத்திற்கு உதவி செய்யும் உளவுப் படையான 'றோ' (சயற) மேலும் வளர்க்கப்படுகின்றது. அண்மையில் அதன் 400 உயர் அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளும், பாராட்டுக்களும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்திய விரிவாதிக்க நோக்கத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதும் தொடர்ந்து அது ஆக்கிரமிப்புக்கான அனைத்து சதி, உளவு முயற்சிகளிலும் ஈடுபடும் என்பதும் நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது.

## பெருகிவரும் அரசியல், பொருளாதார நெருக்கடிகள்

ஜனாதிபதி பிரேமதாசா ஜனநாயக உரிமைகளையும் அடிப்படை மனித உரிமைகளையும் தான் பேணிக்காப்பேன் என்று வாக்குறுதி அளித்திருந்தார். வுழக்கம் போல் இவ்வாக்குறுதியும் காப்பாற்றப்படாமல் விடப்பட்டிருக்கின்றது. ஏனெனில் இன்றும் இராணுவ ரீதியில் போராட்டங்களை அடக்குதல் தொடர்கிறது. குறிப்பாக இளைஞர்களை அடக்கும்

அரசாங்கத்தின் கொள்கை தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. இதனால் இரவில் கேட்கும் துப்பாக்கிச் சத்தங்களையும் அதனைத் தொடர்ந்து அரைகுறையாக எரிக்கப்பட்ட சடலங்களையும் சாலை ஓரங்களில் இன்னமும் காணக்கூடியதாய் இருக்கின்றது. முற்று முழுதான அழித்தொழிப்பு என்பது குறைந்துள்ள போதும் கடந்த கால பகிரங்க காட்டுமிராண்டித்தனம் இன்னும் நிலவுகின்றது. மக்கள் அச்சத்துடனும் பெரும் பீதியுடனுமே வாழ்கின்றனர். சகல அரசியல் நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அவசரகால நிலைமையும் பயங்கரவாத தடைச்சட்டமும் இன்னமும் அமுலில் இருக்கின்றன.

1977-ல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க அரசினால் அமுல்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையினால் இலங்கைப் பொருளாதாரம் அந்நிய ஏகாதிபத்தியங்களினால் சூறையாடப்படுவதற்கு திறந்து விடப்பட்டது. கடந்த 13 ஆண்டு காலத்தில் இலங்கை மேலும் மேலும் மோசமான ஏகாதிபத்திய சுரண்டலுக்கு ஆளாகியிருக்கின்றது. அதிகரித்துவரும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த ஐ.தே.க அரசு தவறிவிட்டது. உலக வங்கியினதும், சர்வதேச நாயண நிதிநிறுவனத்தினதும் உத்தரவுகளின்படி உரமானியம் உட்பட சகல மானியங்களையும் ரத்துச் செய்துவிட்டது. மின்சாரம், போக்குவரத்து போன்ற அடிப்படை சேவைகளினதும் மா, சீனி, பால்மா, பாண் போன்ற அடிப்படைப் பண்டங்களினதும் விலைகளை அதிகரித்துள்ளது. இவ்விலை அதிகரிப்புகள் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு இருக்கின்றன. இதை சமாளிக்க முடியாமல் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவைக் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கும் நிலையில் பெரும்பான்மையான மக்கள் கடும் வறுமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். இதுவே இலங்கையின் இன்றைய உண்மை நிலையாகும்.

இக்கஷ்ட நிலையிலிருந்து விடுபடுவது எப்படி என்பதே இன்று இலங்கை மக்கள் அனைவரின் முன்னுள்ள கேள்வியாகும். இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான கேள்வியாக இவை இருப்பினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இவற்றுடன் இன்னுமொரு முக்கிய கேள்விக்கும் விடை காணவேண்டியவர்களாக இருக்கின்றனர். வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வாபஸ் பெறப்பட்டுள்ள இந்நிலையில் கடந்த காலப் போராட்ட வெற்றிகளை பாதுகாத்து ஸ்திரப்படுத்திக் கொள்வது எப்படி என்ற வினாவுக்கே விடை காணவேண்டியவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

## பாரிச இனவெறியில் இலங்கையரசு

இலங்கையரசு தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எந்த ஒரு அமைப்பையும் பயன்படுத்துவதற்கோ அல்லது அழிப்பதற்கோ தயங்கியது கிடையாது. புலிகளுடனான பேச்சுவார்த்தையும் இதன் ஓர் வெளிப்பாடே. இலங்கையரசைப் பொறுத்தவரையில் தொடக்கத்திலிருந்தே இந்திய ஆக்கிரமிப்பை எதிர்ப்பது அதன் நோக்கமல்ல. இந்திய ஆக்கிரமிப்பை ஏற்று அவர்கள் தயவில் தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வது என்பதே அதன் நோக்கமாகும். மக்களின் ஏகோபித்த எதிர்ப்பு காரணமாகவே இந்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கும் நிலைக்கு இலங்கையரசு தள்ளப்பட்டது.

'இனப்பிரச்சனை எமது உள்நாட்டுப் பிரச்சனை. அதனை நாமே பேசித் தீர்த்துக் கொள்வோம். இதில் இடையில் வேறு யாரும் தேவையில்லை' என்று இந்திய இராணுவ வெளியேற்றத்திற்கு காரணம் கூறிய ஜனாதிபதி பிரேமதாசா இந்திய இராணுவம் முற்றாக வெறியேறிவிட்ட பின்பும் இன்றுவரை தமிழ் மக்களுக்கு வழங்க இருக்கும் உரிமைகள்

பற்றி தெளிவாக எதையும் கூறவில்லை. தமிழ் தேசிய இனத்திற்கு அடிப்படை உரிமைகளை வழங்குவது என்ற விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சியினர் மற்றும் சகல பாராளுமன்றவாத, சமரசவாத கட்சிகள் உட்பட முழு ஆளும் வர்க்கத்தினதும் போலித்தனம் மிகவும் தெளிவாக உணரக்கூடியதாய் உள்ளது.

தமிழ் மக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை வழங்க ஐ.தே.க முனையும்போது சிறிமாவோ தலைமையிலான சிறிலங்கா சுகந்திரக்கட்சி எதிர்ப்பு தெரிவிப்பதும், பின் இவ் அடிப்படை உரிமைகளை வழங்க சிறிலங்கா சுகந்திரக்கட்சி முனையும்போது ஐ.தே.க எதிர்ப்பு தெரிவிப்பதும் மாறி மாறி நடக்கும் நிகழ்வுகளாக இருக்கின்றன. இவ்வாறு ஆட்சிக் கட்டிலில் ஏறும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுகந்திரக்கட்சியும் தமிழ் மக்களைப் பொறுத்த விடயத்தில் மாறிமாறி விளையாடும் சதுரங்கத்தை 1948-ம் ஆண்டு சுகந்திரம் (?) பெற்ற காலத்திலிருந்து நாம் காண்கிறோம். ஐ.தே.க சிறிலங்கா சுகந்திரக்கட்சி மட்டுமல்ல மற்றைய திரிபுவாத போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட அனைத்து பாராளுமன்றவாதக் கட்சிகளும் பதவி நாற்காலிகளைப் பிடிக்கும் பொருட்டும், பிடித்த பதவிகளை தொடர்ந்து காப்பாற்றும் பொருட்டும் இனவாத அரசியலை மேற்கொள்வது அன்று தொடக்கம் இன்றுவரை நிகழ்ந்து வருகின்றது.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா ‘முழுப் பிரச்சனைகளையும் முழுமையாக நான் தீர்ப்பேன்’ என்று அடிக்கடி கூறி வருகின்றார். இது மக்களை ஏமாற்றும் ஒரு கபட வார்த்தையே. ஏனெனில் இன்றைய பிரச்சனைகளுக்கு காரணம் விரிவாதிக்கத்துக்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் துணைபோகும் ஆளும் வர்க்கம் தான். எனவே இவற்றை தோற்கடிக்காமல் பிரச்சனைகளுக்கு முழுத் தீர்வு காணமுடியாது. இந்நிலையில் இன்றைய ஆளும் வர்க்கங்களின் உண்மையான பிரதிநிதியான ஜனாதிபதி பிரேமதாசா பிரச்சனைகளை முழுவதுமாக தீர்க்கப்போவதாக கூறுவது வேடிக்கை மட்டுமல்ல மக்களை ஏமாற்றி தனது பதவியை தக்கவைத்துக் கொள்ளும் ஒரு முயற்சியாகும்.

## தீர்வு என்ன?

சரியான கொள்கைப் பிடிப்பும், உறுதியான போர்க் குணமிக்க போராட்டமும் ஆக்கிரமிப்பாளர்களையும், ஒடுக்கு முறையாளர்களையும் விரட்டியடிக்கும் என்பதை கடந்தகால வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்திய ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டபோதும் அதற்கு துணைபோன பாசிச இனவெறி அரசு தனது இனவாத, ஒடுக்குமறை அரசியலை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. ‘மலையக தமிழ் மக்களை விமானத்தில் கொண்டுபொய் இந்தியாவில் போடுவோம்’ என்றும் ‘எமது இராணுவம் நொடிப் பொழுதில் தமிழ் மக்களை தோற்கடிக்கும் வல்லமை கொண்டது என்றும் ஆணவமாக பேசி தமிழ் மக்களை அச்சுறுத்தி வருகின்றது. இது அவர்களின் இனவாத அரசியலின் தொடர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது.

இன்றைய நிலையில் வளர்ந்துவரும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு மூலகாரணமாகிய இனவெறி அரசுக்கு எதிராக உறுதியான போராட்டத்தை முன்னெடுத்து அதை வீழ்த்துவதா? அல்லது இனவெறி அரசுடன் ஏதாவது ஒருவகையில் சமரசம் செய்து அதன் இனவெறி ஆட்சி தொடர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதா? என்ற கேள்வி எழுகின்றது. ஆயுத ஒப்படைப்பு, பாராளுமன்ற தீர்வு, மாகாணசபை ஏற்பு அல்லது தமிழ் ஈழம் போன்ற கோரிக்கைகளுடன், இனவெறி அரசுடன் சமரசம் செய்துகொள்ள முயற்சிப்பது இலங்கை மக்களின் துயரங்கள் நீடிக்கவே வழிசெய்யும். ஆதலால் எவ்வித

சமரசத்திற்கும் இடங்கொடமல் உறுதியான போராட்டத்தை முன்னெடுத்து பாசிச இனவெறி அரசை வீழ்த்துவதன் மூலமே தமிழ் மக்கள் மட்டுமல்ல இலங்கை மக்கள் அனைவரும் விடுதலை பெறமுடியும்.

இந்திய விரிவாக்கத்திலிருந்தும், மற்றும் அந்நிய ஏகாதிபத்திய சுரண்டல்களிலிருந்தும், அரைநிலப்பிரபுத்துவ தேக்கநிலையிலிருந்தும் இலங்கை மக்களை புதிய ஜனநாயகப் புரட்சி ஒன்றோ முழுமையாக விடுதலை செய்யும். இப்புதிய ஜனநாயகப் புரட்சி பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் சகல முற்போக்கு சக்திகளுடன் ஐக்கியப்பட்டு இலங்கையின் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசியங்கள், மக்கள் அனைவருக்கும் உண்மையான சுகந்திரம், ஜனநாயகம், ஐக்கியம், சமத்துவம் ஆகியவற்றை உத்தரவாதம் செய்யும் அடிப்படையில் மக்கள் ஜனநாயக அரசு ஒன்றை அமைக்கும் நோக்கம் கொண்டது. ஏகாதிபத்திய சுரண்டலிலிருந்தும், அரைநிலப்பிரபுத்துவ தேக்கநிலையிலிருந்தும் விடுதலை பெறவும் தொடர்ந்து சோசலிசம், கம்யூனிசத்தை சென்றடைவதற்கும் இதுவே ஒரு வழியாகும்.

பாசிச இனவெறி அரசு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் எதிரியாகவே இன்று இருக்கின்றது. எனவே தங்கள் முதல் எதிரியும் பொது எதிரியுமான இவ்வினவெறி அரசை வீழ்த்த தமிழ்-சிங்கள உழைக்கும் மக்கள் ஐக்கியப்படுவது சாத்தியமானதும் தவிர்க்க முடியாததும் கூட. மேலும் தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் ஐக்கியம் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றியீட்டுவதற்கு முன்நிபந்தனையாகவும் உள்ளது. ஆதலால் தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை ஏற்படுத்துவதே இன்று அனைத்து முற்போக்கு மற்றும் போராட்ட சக்திகளின் கடமையாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். ஆதலினால் தமிழ் மக்கள் பெற்ற போராட்ட வெற்றிகளை ஸ்திரப்படுத்தி வளர்த்தெடுக்கவும், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் தமிழ்-சிங்கள உழகைக்கும் மக்களை ஐக்கியப்படுத்தி புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்கவும் அனைத்து முற்போக்கு தேசபக்தசக்திகளும் முன்வருமாறும், ஐக்கியப்படுமாறும் பேரவை அறைகூவல் விடுக்கின்றது.

- ♦ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை உருவாக்குவோம்!
- ♦ அரைநிலப்பிரபுத்துவ தேக்கநிலைக்கும் ஏகாதிபத்திய சுரண்டலுக்கும் முடிவுகட்ட இன ஒடுக்குமுறையிலிருந்தும் இந்திய விரிவாதிக்கத்திலிருந்தும் விடுதலை பெற புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம்!!
- ♦ மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிப்போம்!!!